1969 பிப்ரவரி 26]

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,33,516க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பரிவுரையின் மேல், ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,92,310க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1969ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

9. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.